டி.என்.பி.எஸ்.சி குரூப் 2 தேர்வில் தமிழக அளவில் முதலிடம் பெற்ற

# கம்பத்தைச் சேர்ந்த நபிலாவுக்குப் பாராட்டு!

## தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. நேரில் தெரிவித்தார்!



தேனி, ஜூன் 24 - கம்பம் கம்பமெட்டு காலனி காட்டு பள்ளி வாசல் தெருவை சேர்ந்தவர் அகமது கபீர் (57) போடி நகராட்சியில் சுகாதார ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறார். இவரது மகள் நபிலா (27) இவருக்கு திருமணம் ஆகி முகமது அப்சல் என்ற கணவரும், ஒரு வயதில் குழந்தையும் உண்டு. தற்போது சென்னையில் வசித்து வருகிறார்.

இந்நிலையில் நபிலா தமிழக அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்திய குரூப் 2 தேர்வில் தமிழக அளவில் முதலிடம் பெற்று சாதனை படைத்தார். இதனைத் தொடர்ந்து அவருக்கு பல்வேறு அரசு பணிகள் காத்திருந்தன.

இருந்த போதும் வணிகவரித்துறை உதவி ஆணையாளருக்கு டிஎன்பிஎஸ்சி குரூப் முதல் நிலை தேர்வில் பங்கேற்று 27 வது இடம் பிடித்தார்.

இந்நிலையில் அவருக்கு சென்னையில் வணிகவரித்துறை அலுவலகத்தில் உதவி ஆணையாளர் பணி நியமன ஆணை கிடைத்தது. இதையடுத்து சொந்த ஊரான கம்பத்திற்கு வந்த அவரை பல்வேறு அமைப்பினர், தன்னார்வலர்கள், உறவினர்கள் வாழ்த்து தெரிவித்து வந்தனர்.

அதன்படி நேற்று நபிலாவின் வீட்டிற்கு சென்ற தேனி எம்பி தங்க தமிழ்ச்செல்வன் நபிலாவை சந்தித்து தனது வாழ்த்துக்களை தெரியப்படுத்திக் கொண்டார்.

மேலும் நபிலாவின் திறமையை பாராட்டி ஊக்க தொகையும் வழங்கினார். இதுகுறித்து தேனி எம்பி தங்க தமிழ்ச்செல்வன் கூறுகையில், தமிழக அளவில் டி.என்.பி.எஸ்.சி குரூப் 2 ம் நிலை தேர்வில் தமிழக அளவில் முதலிடம் பெற்று கம்பத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்.

நபிலாவின் திறமையை பாராட்டுகிறேன் என்றார்.

இதேபோல் பெண் பிள்ளைகள் பல்வேறு போட்டி தேர்வுகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்று உயர் பதவிகளில் பணி புரிய வேண்டும் என்றார்.




தி.மு.க.
இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### விழுப்புரம் மத்திய மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு விழுப்புரம் மத்திய மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய–நகர–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 24.06.2025 | கண்டமங்கலம் மத்திய ஒன்றியம் | பாக்கம் கூட்டுரோடு | முருக்கம் முனுசாமி<br>எ.கீர்த்தனா |
| 2 | | கண்டமங்கலம் தெற்கு ஒன்றியம் | சொரப்பூர் | முருக்கம் முனுசாமி<br>எ.கீர்த்தனா |
| 3 | | விழுப்புரம் நகரம் கிழக்கு | பழைய பேருந்து நிலையம் எதிரில் | வளவனூர் ப.அன்பரசு<br>த.இன்பகுமரன் |
| 4 | | காணை கிழக்கு ஒன்றியம் | கோனூர் | வளவனூர் ப.அன்பரசு<br>த.இன்பகுமரன் |
| 5 | 25.06.2025 | வானூர் கிழக்கு ஒன்றியம் | திருச்சிற்றம்பலம் கூட்டுரோடு | வளவனூர் ப.அன்பரசு<br>ந.அப்துல் வகாப் அதாயி |
| 6 | | வானூர் மத்திய ஒன்றியம் | பாப்பான்சாவடி | வளவனூர் ப.அன்பரசு<br>ந.அப்துல் வகாப் அதாயி |
| 7 | | கோட்டக்குப்பம் நகரம் | கோவில்மேடு | வளவனூர் ப.அன்பரசு<br>ந.அப்துல் வகாப் அதாயி |
| 8 | | விழுப்புரம் நகரம் மேற்கு | தந்தை பெரியார் நகர் (டி.பி.டி.சி.) | முருக்கம் முனுசாமி<br>கே.அஸ்வின்குமார் |
| 9 | | கோலியனூர் மத்திய ஒன்றியம் | மரகதபுரம் | முருக்கம் முனுசாமி<br>கே.அஸ்வின்குமார் |
| 10 | 26.06.2025 | கண்டமங்கலம் வடக்கு ஒன்றியம் | வி.நெற்குணம் | துரை மணிவேலன்<br>கே.அஸ்வின்குமார் |
| 11 | | வானூர் மேற்கு ஒன்றியம் | சிறுவை | துரை மணிவேலன்<br>கே.அஸ்வின்குமார் |
| 12 | | கோலியனூர் கிழக்கு ஒன்றியம் | கோலியனூர் கூட்டுரோடு | வே.விக்ரமன்<br>ந.அப்துல் வகாப் அதாயி |
| 13 | | வளவனூர் பேரூர் | நான்கு முனை கடைவீதி, வளவனூர். | வே.விக்ரமன்<br>ந.அப்துல் வகாப் அதாயி |
| 14 | 27.06.2025 | கிளியனூர் கிழக்கு ஒன்றியம் | நல்லாவூர் | துரை மணிவேலன்<br>த.இன்பகுமரன் |
| 15 | | கிளியனூர் மேற்கு ஒன்றியம் | தைலாபுரம் | துரை மணிவேலன்<br>த.இன்பகுமரன் |
| 16 | | கோலியனூர் தெற்கு ஒன்றியம் | அரசமங்கலம் | வே.விக்ரமன்<br>எ.கீர்த்தனா |
| 17 | | கண்டமங்கலம் மேற்கு ஒன்றியம் | கடைவீதி, மோட்சகுளம், சிறுவந்தாடு | வே.விக்ரமன்<br>எ.கீர்த்தனா |

விழுப்புரம்
நாள் : 22.06.2025







தி.மு.க.
இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### சிவகங்கை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி பா.செந்தில்குமார் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு சிவகங்கை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய–நகர–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 24.06.2025 | தேவகோட்டை தெற்கு ஒன்றியம் | முப்பையூர் | சி.அய்யாச்சாமி<br>கு.சுமித்ரா |
| 2 | | தேவகோட்டை வடக்கு ஒன்றியம் | புளியால் | சி.அய்யாச்சாமி<br>கு.சுமித்ரா |
| 3<br>4 | | சிங்கம்புணரி தெற்கு ஒன்றியம் | எம்.சூரக்குடி | சிவ முத்துவளவன்<br>ஞா.சந்தியா |
| 5 | | சிங்கம்புணரி வடக்குஒன்றியம் | ஏ.காளாப்பூர் | சிவ முத்துவளவன்<br>ஞா.சந்தியா |
| 6 | | மானாமதுரை கிழக்கு ஒன்றியம் | செய்களத்தூர், சமத்துவபுரம் | தமிழ்பிரியா பிரபாகரன்<br>அ.சார்மதி |
| 7 | | மானாமதுரை மேற்கு ஒன்றியம் | சின்ன கண்ணனூர் | தமிழ்பிரியா பிரபாகரன்<br>அ.சார்மதி |
| 8 | 25.06.2025 | தேவகோட்டை நகரம் | ஒத்தக்கடை | அ.கணேசன்<br>ஞா.சந்தியா |
| 9 | | காரைக்குடி நகரம் | பழைய பேருந்து நிலையம் | அ.கணேசன்<br>ஞா.சந்தியா |
| 10 | | திருப்பத்தூர் வடக்கு ஒன்றியம் | சமத்துவபுரம் அருகில் | கு.சுமித்ரா |
| 11 | | கல்லல் மேற்கு ஒன்றியம் | கொரட்டி | கு.சுமித்ரா |
| 12 | | இளையான்குடி கிழக்கு ஒன்றியம் | அளவிடங்கான் | தமிழ்பிரியா பிரபாகரன்<br>கு.ஹரிசங்கர் |
| 13 | | இளையான்குடி தெற்கு ஒன்றியம் | சாத்தனூர் | தமிழ்பிரியா பிரபாகரன்<br>கு.ஹரிசங்கர் |
| 14 | | சாக்கோட்டை மேற்கு ஒன்றியம் | கொத்தமங்கலம் | பா.கணேசன்<br>நா.நவீன் |
| 15 | | கோட்டையூர் பேரூர் | ஸ்ரீராம் நகர் | பா.கணேசன்<br>நா.நவீன் |
| 16 | | சிவகங்கை நகரம் | அம்பேத்கர் சிலை அருகில் | சிவ முத்துவளவன்<br>சி.ராஜபாரதி |
| 17 | | சிவகங்கை தெற்கு ஒன்றியம் | வண்டவாசி | சிவ முத்துவளவன்<br>சி.ராஜபாரதி |
| 18 | | திருப்பத்தூர் தெற்கு ஒன்றியம் | கல்வெட்டித் தெரு | தமிழ்பிரியா பிரபாகரன்<br>பீ.ஜோஷி அபர்ணா |
| 19 | | திருப்பத்தூர் பேரூர் | அக்னி பஜார் மூலை | தமிழ்பிரியா பிரபாகரன்<br>பீ.ஜோஷி அபர்ணா |
| 20 | 26.06.2025 | காளையார்கோவில் கிழக்கு ஒன்றியம் | பேருந்து நிலையம் | சி.அய்யாச்சாமி<br>கு.ஹரிசங்கர் |
| 21 | | காளையார்கோவில் தெற்கு ஒன்றியம் | மறவமங்கலம் | சி.அய்யாச்சாமி<br>கு.ஹரிசங்கர் |
| 22 | | சிவகங்கை வடக்கு ஒன்றியம் | மதகுப்பட்டி | பா.கணேசன்<br>அ.சார்மதி |
| 23 | | நாட்டரசன்கோட்டை பேரூர் | கோயில் அருகில் | பா.கணேசன்<br>அ.சார்மதி |

சிவகங்கை
நாள் : 22.06.2025






தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள கிராம ஊராட்சிகளில் சரவணக்குமார் எம்.எல்.ஏ. நேரில் சென்று பொதுமக்களிடம் குறைகள் கேட்டறிந்தார். பொதுமக்கள் குறைகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள வாட்ஸ் அப் குரூப்பில் பொதுமக்களைச் சேர்த்து குறை இருந்தால் இந்த குரூப்பில் போட்டவுடன் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். உடன் பெரியகுளம் வடக்கு ஒன்றியச் செயலாளர் எல்.எம். பாண்டியன், உன்னால் ஊராட்சி மன்றத் தலைவர் தங்கவேல் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.